# அசல் அரசியலுக்கு சினிமாவில் இடமில்லை

தமிழ் சினிமாவில் எப்போதுமே அரசியல்வாதிகள் வில்லன்களாகவே சித்திரிக்கப்படுகிறார்கள். நல்ல அரசியல்வாதி பாத்திரம் என்றால் அது விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட தியாகியாகவே இருக்கும். இப்படிப்பட்ட சித்திரிப்பு மிகைப்படுத்தப்பட்டது என்றாலும், வெகுஜன சினிமா எப்போதுமே பொது புத்திக்கு விரோதமாக செயல்படாது என்பதை நாம் கவனிக்க வேண்டும். சமூகத்தின் பொது புத்தியில் அரசியல்வாதிகள் ஊழல், அராஜகம் இரண்டும் நிரம்பியவர்களாகவே இருக்கிறார்கள். நல்ல அரசியல்வாதி என்பவன் லஞ்சம் வாங்கிக் கொண்டு அதற்கான காரியத்தை ஒழுங்காக முடித்துக் கொடுப்பவன் என்றே பொது புத்தியில் கருத்து நிலவுகிறது.

பெரும்பாலான தமிழ் சினிமா கதாநாயகர்கள் அரசியல்வாதி-வில்லன்களை சினிமாவில் கடுமையாக எதிர்த்துப் போராடி வெல்லுவதாக நடித்தாலும், நிஜ வாழ்க்கையில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், அதன் முதலமைச்சரிடம் மதிப்பும் மரியாதையும் அன்பும் மிக்கவர்களாகக் காட்டிக் கொள்வதில் விழிப்போடே இருந்து வருகிறார்கள்.

உண்மையில் தமிழ் சினிமா உலகத்தில் எழுபதுகள் வரையில் அரசியல்வாதிகள் முக்கிய பாத்திரங்களாக - வில்லன் பாத்திரங்களாக இடம் பெற்றது மிகக் குறைவு. எம்.ஜி.ஆருக்கும் கருணாநிதிக்கும் தி.மு.கவுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டபிறகு எம்.ஜி.ஆர் ஒரு சில ஊழல் அரசியல்வாதிகளால் நல்ல அரசியல்வாதிகளுக்கு கெட்ட பெயர் வருகிறது என்ற பார்வையை நம் நாடு படத்தில் முன்வைத்தார். அரசியல் என்பதே மோசமானது என்ற கருத்தை முகமது பின் துக்ளக் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் முதலில் புகுத்தியவர் சோ.

ஆந்திராவில் நக்சல்பாரி இயக்கம் பல மாவட்டங்களில் வேகமாக வேரூன்றியபோது, தெலுங்கு கமர்ஷியல் படங்கள் அதை பிரதிபலிக்கத் தொடங்கின. ஊழல் செய்யும் பண்ணையார், அரசியல்வாதி, அமைச்சர் பாத்திரங்கள் வில்லன்களாகவும் கதாநாயகன் காதலியுடன் குத்தாட்டாம் ஆடாத நேரங்களில் மட்டும் நக்சல்பாரி வசனங்களைப் பேசுபவனாகவும் சித்திரிக்கப்பட்டார்கள். இந்த பார்முலாவை காப்பியடித்து எண்பதுகளில் தமிழில் ‘சிவப்பு மல்லி’ படம் வந்தபிறகுதான் நிறைய தமிழ்ப் படங்களில் அமைச்சர்களும் அரசியல்வாதிகளும் வில்லன்களாக்கப்பட்டார்கள். லோக்கல் கவுன்சிலர் அளவில் வில்லனாகக் காட்டப்பட்டதில் தொடங்கி கடைசியில் மாநில ஆளுநராக இருக்கும் அரசியல் வாதியையே வில்லனாக்குவது வரை செய்யப்பட்டுவிட்டது.

பல கருத்துக் கோளாறுகள், சித்தாந்தக் குழப்பங்கள் நிரம்பிய படமானபோதும், அரசியல்வாதிகளை, மனிதர்களாக சித்திரித்த ஒரே படம் என்று தொண்ணூறுகளின் இறுதியில் வந்த மணிரத்னத்தின் ‘இருவர்’ படத்தைச் சொல்லலாம். தமிழ் சினிமாவில் அரசியல் கருத்துக்களை நேர்மையாகவும் துணிச்சலோடும் சொல்லும் சூழல் இன்று இல்லை. அரசியல்வாதிகளை கேலிச்சித்திரங்களாகவும் வில்லன்களாகவும் காட்டுவதை அனுமதிக்கும் தணிக்கைக் குழு, அரசியல் கருத்துக்களை சீரியசான தொனியில் சொன்னால் அனுமதிப்பதில்லை. குற்றப்பத்திரிகை, காற்றுக்கென்ன வேலி போன்ற படங்கள் அசல் அரசியல் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு கற்பனை கலந்து உருவாக்கப்பட்டபோது பெரும் சிக்கலுக்குள்ளாயின.

கமர்ஷியல் சினிமா எப்போதுமே ரத்தமும் சதையும் மனசுமாகிய அசல் மனிதர்களை, ஒற்றைப் பரிமாணம் உடைய தட்டைப் பாத்திரங்களாகவே காட்டி வருகிறது. இந்த அணுகுமுறைக்கு அரசியல்வாதி பாத்திரங்களும் விதி விலக்கல்ல.

**30.10.2007**

**சண்டே இந்தியன்**